1709
4.55

REGISTERED No. M 6165. [illegible] 2

1709

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 DEC 1956
MADRAS

# FATH-HUL ISLAM

# பத்ஹுல் இஸ்லாம்

மாத பத்திரிகை

ஜனவரி 1956.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| அகில உலக முஸ்லிம்களின் ஆத்மார்த்த உறைவிடம் 'கஃபதுல்லா' ... ... ... | 1 |
| திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... .. ... ... ... | 7 |
| மூளை பலத்தால் முன்னேறியவர் ... ... ... | 13 |
| இமாம் அபூ ஹனீபாவின் தீர்ப்பு ரஹ்மத்துல்லா—மஆலி (பாகவி) ... ... | 19 |
| இரத்தச் சின்னம் (தொடர் கதை) ... ... | 23 |


இஸ்லாம் ஆபீஸ் :
ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

SL
Q7211, N24 F5
N56
187048

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

## இரத்தின விலாசம்
## நஸீஹத்துலாசம்

அல்லாஹ், றஸூலைக்கொண்டு ஈமான் கொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் படித்தறிந்து அமல் செய்ய வேண்டிய அருமையான நூல் இது. பிரபல இஸ்லாமிய அரபு கிரந்தங்களாகிய கஜானத்துல் அஸ்ரார், ஷிர்ஹத்துல் இஸ்லாம், ரத்துல் முக்தார், துர்ரத்துன் நாஸிஹின் முதலிய கிதாபுகளிலிருந்து திரட்டி யெடுத்தெழுதப்பட்ட அருமையான நஸீஹத்துகளும், மஸ்அலாக்களும், ஹதீதுகளும், ஹிக்காயத்துகளும் நிறைந்த நூல் இது. ஒவ்வொருத்தருடைய கையிலும் இருந்து தீரவேண்டிய புத்தகம். தமிழ் முஸ்லிம்களுக்கு இன்றியமையாத நூல். இதன் அருமை நேரில் பார்த்தால் தெரிய வரும்.

சுத்தத் தமிழ் ரூ. 1—8—0

இந்த புஸ்தகம் கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

الاسلام

# 'பத்ஹுல் இஸ்லாம்'

ஜனவரி—1956.

## அகில உலக முஸ்லிம்களின் ஆத்மார்த்த உறைவிடம் 'கஃபத்துல்லாஹ்'

முஸ்லிம்களின் இறைவன் ஒருவனே; அவனுக்கு இணையாரும் இல்லை; ஏதும் இல்லை; இப்பிரபஞ்சத்து முஸ்லிம்கள் எந்த பூப்பரப்பில் இருந்த போதிலும் அவர்களெல்லோரும் ஒரே திசையை நோக்கித்தான் தொழுது கொள்கிறார்கள். எல்லா முஸ்லிம்களும் ஓதும் வேதம் ஒன்றாகவேதான் இருக்கிறது. அவர்களெல்லோரின் அனுஷ்டான முறைகளும் ஆத்மார்த்த இலக்ஷியமும் ஒன்றாகவே தான் இருக்கின்றன.

இவ்வாறே முஸ்லிம்கள், தங்களுடைய ஆத்மார்த்த ஞானாசிரியராக ஏற்றுக்கொண்டிருக்கும் நபியும் ஒருவரே; தீர்க்கமானவரே; பரிபூர்ண குணலக்ஷண முள்ளவரே. எனவே முஸ்லிம்கள் பற்பல தேசத்தில் வசித்தபோதிலும் சரியே, பலப்பல பாஷைகள் பேசிய போதிலும் சரியே, பலப்பல நடையுடைய தோற்றத்தில் காணப்பட்ட போதிலும் சரியே, அவர்களையெல்லாம் ஓர் இணையிலா ஆத்மார்த்த லக்ஷியம் ஒரே இனத்தில் சேர்த்து, எல்லோரையும் சகோதரத்துவக் கயிற்றால் பிணைத்து வைத்துவிடுகிறது.

அதுதான் தவ்ஹீது என்னும் ஏக தெய்வத்துவக் கொள்கை. மேலும் அவை ஈமான் என்னும் தெய்வ கல்பனா சங்கல்ப திட நம்பிக்கையும், கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ்ஜு

என்னும் ஷரீஅத்துக் கிரியை சம்பந்தமான கோட்பாடுகளுமாகும். முஸ்லிம்களின் உலக சம்பந்தமான வழக்கப் பழக்கங்கள் என்ன மாதிரியாக இருந்தபோதிலும் சரியே, எல்லோரும் ஏகதெய்வத்தை நம்புவதும், ஈமான் கொள்வதும், தொழுது கொள்வதும், நோன்பு விரதம் அனுஷ்டிப்பதும், ஹஜ்ஜு யாத்திரை புரிவதும் மற்றும் ஷரீஅத்து சம்பந்தமான காரியங்களெல்லாம் ஒரே மாதிரியாகத் தான் இருக்கின்றது.

"குல்லு மூமினும் இக்வத்துன்" (எல்லா மூமினான முஸ்லிம்களும் தமக்குள் சகோதரர்களேயாவர்) என்பது எழுத்துமுறையில் மட்டுமல்ல, கொள்கை முறையில் மட்டுமல்ல, அனுஷ்டான ரீதியாகவே இன்று உலகமெங்கும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்து வருகிறது.

இந்த இஸ்லாமிய விசுவ சகோதரத்துவக் காட்சியை, சர்வசாதாரணமாக துல்ஹஜ்ஜு மாதத்தில், திருமக்கா நகரின் கண் கூடும் சர்வலோக முஸ்லிம்களின் ஆத்மார்த்த அனுஷ்டான தார்மீக தத்துவார்க்க 'மகாநாட்டில்' அதாவது ஹஜ்ஜு வணக்கத்தின்போது காணலாம். இங்ஙனம் உலக முஸ்லிம்களை யெல்லாம் ஒன்று சேர்த்து வைக்கும் ஆத்மார்த்த உறைவிடம் திருமக்காவிலுள்ள கஃபத்துல்லாஹ் என்னும் புண்ணிய புனித பூர்வீக ஏக தெய்வாலயமே யாகும்.

பழம்பெரும் வேதங்களான தவ்ராத்திலும், ஜபூரிலும், இன்ஜீலிலும், நமது திருக்குர்ஆனிலும் மனித சமுதாய ஞான ஆன்மார்த்த உறைவிடமாகிய கஃபத்துல்லாஹ் என்னும் ஏக இறைவனின் புனித இல்லத்தைப் பற்றி, பிரஸ்தாபம் அபரிமிதமாக வந்து இருக்கிறது: நான்கு வேதங்களும் புனிதமான ஆத்ம உறைவிடம் என்று போற்றிப்புகழும் திருமக்காவிலுள்ள புனித கஃபத்துல்லாவின் மகிமை அபாரமானதாகும்.

நமது நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய காலத்துக்கு முன், திருமக்காவிலுள்ள ஆலயம் ஏக தெய்வ வணக்க வழிபாடு நடக்கும் கஃபத்துல்லாஹ்வாக இருக்கவில்லை. பற்பலவிதமான தோற்றங்களில் மிக வின்னியாஸமான சிலைகளையும், மூர்த்திகளையும், விக்கிரஹங்களையும் செய்து வைத்துக் கொண்டு, இஷ்டம்போல் அவைகளுக்குப் பெயர்களைச் சூட்டிக் கொண்டு, பூஜையும் நைவேத்தியமும் யாகங்களும் புனஸ்காரங்களும்

181048

செய்துவந்தனர் அந்தப் பழங்கால அரபு ஜனங்கள். நாளுக்கொரு விக்கிரஹத்துக்கு பூஜை செய்து, வருடம் முழுதும் 360 விக்கிரஹங்களை, விதவிதமாக-வெல்லாம் வணங்கி வந்தனர் அந்த விக்கிரத் தொழும்பர்களான அநாகரிக அரபு ஜாதியினர்.

நம் அருள் நாதர் லோக தயாளர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் அவதரித்த நாற்பது வருஷங்களுக்குப் பிறகே, நுபுவ்வத் அருளப்பட்டதும் அந்த விக்கிரஹங்களுக்கு ஒரு முடிவுகாலம் வரத்தொடங்கியது. நபிகள் பெருமானர் (ஸல்) அவர்கள், "ஹுவல்லாஹு அஹத்" (அந்த அல்லாஹ் என்னும் உண்மைத் தெய்வம் ஒருவனே) என்றும், "லாஇலாஹ இல்லல்லாஹு (மாந்தர் வணங்குதற்கு லாயக்கான தெய்வம் அல்லாஹ்வைத் தவிர வேறெதுவும் கிடையாது; கூடவும் கூடாது) என்றும் தவ்ஹீத் என்னும் ஏக தெய்வ வழிப்பாட்டை போதிக்கத் தொடங்கினர்கள்.

"சத்தியம் வந்துவிட்டது; அசத்தியம் தொலைந்துவிட்டது; அசத்தியம் தொலையக்கூடியதே யாகும்" என்ற தெய்வ வாக்கின் பிரகாரம், அந்த விக்கிரஹத்தொழும்பல் என்னும் அனுசாரப் பழக்க வழக்கம், திரு நபியின் சொற்ப ஆண்டுப் பிரசாரத்தின் மகிமையால் மறைந்தொழிந்துபோய் விட்டது.

இப்போது, அந்தத் திருமக்காவிலுள்ள கஃபத்துல்லாஹ் சுத்த சத்தியமான இஸ்லாமிய ஆன்மார்த்த ஏகதெய்வத்துவ நல்வணக்கம் என்னும் ஐங்காலத் தொழுகை நிறைவேற்றப்படும் அகில உலக மகாப்பெரும் மஸ்ஜிதாக விளங்கி வருகிறது. இது மகான் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் அற்புத முஃஜிஸாக்களில் மிகச்சிறந்ததாகும். உலகம் உள்ளளவும் இனியும் இந்தக் கஃபத்துல்லாஹ் ஆலயமானது, அல்லாஹு அக்பர் என்னும் அதான் (பாங்கு) ஒலியை உலகமெங்கும் பரப்பும் ஒலிப் பிரசார நிலையமாக (அகில உலக இஸ்லாமிய பிராட்காஸ்டிங் ஸ்டேஷனாக) இருந்துவரு மென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

மக்கா ஷரீப் என்னும் நம் இஸ்லாமியப் புனித நகரம், இப்போது எவ்வளவோ முன்னேற்றமும் அபிவிருத்தியும் அடைந்திருக்கிறது. அரபு தேசம் என்றால் முன்னெல்லாம், யாத்திரை புரியும் ஜனங்கள் பயந்து கொண்டிருந்தார்கள். அந்தப் பாலைவன மணற்காட்டில், தண்ணீர் இல்லாத அந்த வனாந்திரத்தில், நூற்றுக்கணக்

கான மைல்தூரம் பிரயாணம் செய்வதென்ருல் இலேசான காரியமா? 'ஸஹராக் கப்பல்' மூலமாகத்தான் அந்த மணல் பிரதேசத்தை கடக்க வேண்டி ஏற்படும். அதாவது ஒட்டகங்கள் மீதேறித்தான், மெல்ல மெல்ல தினம் காததூரம் வழிநடந்து கடந்து செல்ல வேண்டியதாகும். வழியிலேயே 50, 60 மைல் தூரம் வரை தண்ணீர் என்பதை பார்க்கவே முடியாது. நாவறண்டு போனலும், தொண்டை விக்கிக் கொண்டாலும், அந்த மணல் காற்றில் ஒரு சொட்டு தண்ணீரும் கிடைக்காது.

அது மட்டுமா? ஸஹரா பாலே வனக் காடுகளில் ஆங்காங்கு 'பத்வீ'க ளெனப்படும் காட்டு அரபிகள் கள்ளர்களாக மாறி, கூடாரம் போட்டு காத்துக் கொண்டிருப்பார்கள். ஹஜ்ஜுக்குச் செல்லும் யாத்ரீகர்கள் வருவதைக் கண்டால் அவர்கட்கு மகா கொண்டாட்டம். ஹஜ்ஜு காபிலா அருகில் வந்ததும் சரேலென்று பாய்ந்து தாக்கி, வெட்டிக் கொன்று குத்தி, கொள்ளையடிப்பார்கள். உயிருக்கு நேரிடும் அபாயத்தை தடுக்க ஆங்கு எவ்விதமான உதவியும் பாதுகாப்பும் அந்தக் காலத்தில் கிடையவே கிடையா.

ஆனல் இப்போது, நஜத் ஹிஜாஸ் எனப்படும் அந்த அரபு காட்டு ஸுஊதி வம்ச அரசாக்ஷி ஏற்பட்ட பின், அரபு நாடு முழுவதும் மறுமலர்ச்சி தோன்றி, எங்கும் சாந்தியும் சமாதானமும் சுபிக்ஷமும் ஸலாமத்தும் நிலவியிருந்து வருகின்றன. அதாவது உலக நாடுகளிலிருந்து ஹஜ்ஜுக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கு பாலவன வழிப் பிரயாணத்திலோ,, நகரில் வாசம் செய்வதிலோ, ஹஜ்ஜு வணக்க கிரியை அனுஷ்டிப்பதிலே எத்தகைய கஷ்டமும் சிரமும் ஒழுங்கீனங்களும் ஏற்படுவதே இல்லை.

இப்னு ஸுஊது அரசாங்கத்தின் நேர்மையான நிர்வாகத்தின் பயனுய், இப்போது மக்காவிலும் மதீனுவிலும் என்னென்ன சௌகர்யங்கள் இருந்து வருகின்றன வென்பதை சமீப காலத்தில் ஹஜ்ஜுக்குப் போய் வந்த ஹாஜிகள்தான் அனுபவ பூர்வமாக நன்கு அறிவார்கள்.

உதாரணமாக, இந்தியாவி லிருந்தும் பாக்கிஸ்தானி லிருந்தும் ஹஜ்ஜுக்குப் போகும் முஸாபிர்கள், கப்பல் மார்க்கமாய் ஜித்தாத் துறைமுகத்தில் போய் இறங்கியதும், அங்கிருந்து அவர்களை ஏற்றிக் கொண்டு மக்கா நகருக்கோ, மதீனு பட்டணத்துக்கோ போய்ச்

சேர்க்க மோட்டார்-பஸ் வண்டிகள் காத்துக் கொண்டிருக்கின்றன. சாமான்களை ஏற்றிக்கொண்டு பொறுப்போடு அமானத்தாக கொண்டு போய்ச் சேர்க்க லாரி சர்விஸ்களும் இருக்கின்றன. வழியில் ஆங்காங்கு இருபது முப்பது மைல்களுக்கோர் இடத்தில், பிரயாணிகள் தங்கி இளைப்பாறிச் செல்லும் மன்ஜில்கள் (ரெப்ரஷ்மெண்ட் ஸ்டேஷன்கள்) ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. வழிநெடுக தண்ணீர் சௌகர்யம் உண்டு; எங்கும் வழிப்பறி கள்ளர் பயமே கிடையாது. துணைக்கு அரபு போலீஸ் ஜவான்களும் வண்டிகளோடு பாதுகாவலர்களாக வருகிறார்கள்.

புனித மக்கா—மதீனா நகரத்துக்குள் போன பின்னர் நமக்கு வேண்டிய எல்லாவிதமான சௌகர்யங்களும் சாதனங்களும் இடவசதிகளும் துணைகளும் தாராளமாய் கிடைக்கின்றன. ஆங்கு எலக்டிரிக் (மின்சார) வசதி உண்டு; தந்தி ஆபீஸ், போஸ்ட் ஆபீஸ் உண்டு; ரேடியோ ஸ்டேஷன் உண்டு. ஒயர்லஸ் (கம்பியில்லாத் தந்தி) வசதியுண்டு; டிரங்க் டெலிபோன் வசதியுண்டு. நியூஸ் பேப்பர் உண்டு......சுருங்கக் கூறுமிடத்து நவீன நாகரிக நகரங்களிலுள்ள எல்லா வசதி சாதனங்களும் அங்கு உண்டு.

இப்படிப்பட்ட சகல விதமான ஏற்பாடுகளுக்குக் காரண புருஷர், காலஞ்சென்ற நஜத் ஹிஜாஸ் மன்னர் மலிக்குல் அரப் ஹஜ்ரத் அப்துல் அஜீஸ் இப்னு ஸஊத் அவர்களே யாவர். சுமார் 30-வருஷங்களுக்கு முன் அவரது இஸ்லாமிய ஆக்ஷி ஏற்பட்ட பிறகே, மக்கா மதீனா நகரங்களில் சீரும் செழிப்பும் மிகுந்த பல சீர்திருத்தங்களும் அபிவிருத்திகளும் வசதிகளும் உண்டாயின.

இப்போது, நஜத் ஹிஜாஸ் (மக்கா, மதீனா) தேசங்களுக்கு அரசராய் இருப்பவர் ஸஊத் (அவ்வல்) இப்னு அப்துல் அஜீஸ் ஆவர். இந்த மன்னர், தந்தை காலத்தில் இளவரசராக இருந்தவர். இவர் அரியணையில் அமர்ந்த பின் தந்தையார் வகுத்திருந்த அரசியல் திட்டப்படியே நாட்டை ஆண்டு இன்னும் பல சௌகரியங்கள் உடையதாகச் செய்துள்ளார்

இந்த நஜத் ஹிஜாஸ் மன்னர் ஸுல்தான் ஸவூது அவர்கள் நம்பாரத அரசியலார் அழைப்பின்பேரில் நம் நாடாகிய இந்தியாவுக்கு விஜயம் செய்து, டில்லியில் (27-11-55ல்) கண்ணியம்மிக்க விருந்தினராக தங்கி யிருந்தார். மேன்மை தங்கிய ஜவாஹர்லால் நேஹ்ரு,

இராஜேந்திர பிரசாத் போன்ற இராஜ்யத் தலைவர்களால் வரவேற்கப் பட்டு, டில்லி ஜாமிஆ மஸ்ஜித், ஆக்ரா தாஜ்மஹால், அலிகார் சர்வ கலாசாலை, பம்பாய், பெங்களூர், மைசூர். முதலிய நகரங் களில் சுற்றுப்பிரயாணம் செய்து, பொதுவாக இந்திய ஜனங்களுடை யவும் குறிப்பாக இந்தியாவில் வதியும் நாலரைக் கோடி முஸ்லிம் மகா சமூகத்துடையவும் அன்பையும் ஆதரவையும் பெற்றுத் திகழ்ந் தார் என்பதை பத்திரிகைச் செய்தி படிக்கும் நண்பர்கள் அறிந் திருப்பார்கள்.

ஸுல்தான் ஸுஊது அவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்த அரசியல் நோக்கம் எதுவாக இருந்தபோதிலும், அரபு சுல்தான் அவர்கள், அகில உலக முஸ்லிம் மகா சமுதாயத்தின் ஆத்மார்த்த இஸ்லாமிய தார்மீகப் புனித உறைவிடமாகிய கஃபத்துல்லாஹ்வுக் கும், ரவ்லத்துந் நபி என்றும் மதீனா பள்ளிக்கும் 'காவலர்' என்ற முறையிலும், 'காதிமுல் ஹரமைன்' என்ற முறையிலும், நாமெல் லோரும் அவருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். எல்லாம் வல்ல இறைவனான ரப்புல் ஆலமீன், ஜலாலத்துல் முல்க் நஜத் ஹிஜாஸ் சுல்தான் ஸுஊதுல் அவ்வல் (கல்ல தல்லாஹு முல்கஹு வஸல்தனத்தஹு) அவர்களுக்கு, நீண்ட ஆயுளையும் நிறைந்த சௌகர்யங்களையும் கொடுத்து, அதன் பயனாய் ஹாஜிகளும் மக்கா மதீனாவாசிகளும் நற்பயன் அடைய இன் அருள் புரிவானாக. ஆமீன்!


## பன்னிரண்டு மாலை

இது கிழக்கரையி லடங்கி மறைந்திரா நின்ற மெஞ் ஞான சொரூபராகிய காமிலொலி ஷெய்க் அப்துல் காதிர் லெப்பை ஆலிம் சாஹிபு அவர்களால் பாடியது. இதில் தரீ கத்து மாலை, ஹகீகத்து மாலை, மஃரிபத்து மாலை, தவ்ஹீது மாலை, சிர்று மாலை, திக்று மாலை, பிக்ரு மாலை, உஜூது மாலை, ஷுஹூது மாலை, அதபு மாலை, அறிவு மாலை, பயா னுத்தீன் மாலை ஆக பன்னிரண்டு மாலைகள் சேர்ந்திருக் கின்றன.

சுத்தத் தமிழ் பதிப்பு விலை அணா 8
மேற்படி அறபுத் தமிழ் விலை அணா 14

இந்த புஸ்தகம் கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(14-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : :

## : : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ர்ஹ்மத் பாகவி)

### இப்ராஹீமை இறைவன் நபியாக்கி அனுப்பினான்.

(ஹஜ்றத்) இப்ராஹீமை, அவருடைய இரக்ஷகன், பல விஷயங்கள் கொண்டு பரிசோதனை செய்தான். (ஹஜ்றத்) இப்ராஹீம், அந்த விஷயங்களி லெல்லாம் பரிபூரணமாக (தேர்ச்சி பெற்று) விளங்கினார். எனவே, அப்போது இறைவன் (ஹஜ்றத் இப்ராஹீமை நோக்கி) "நான் உம்மை எல்லா ஜன சமூகத்துக்கும் வழிகாட்டி (நபி) யாக ஆக்கி வைக்கப் போகிறேன்; (நீர் என்ன வேண்டுகிறீர்?)" என்று கேட்டான். அதற்கு (ஹஜ்றத்) இப்ராஹீம், "என்னுடைய (பிதுர்களாகிய) மக்களி லிருந்தும் அப்படி (வழி காட்டியை உண்டாக்குதல்) செய்வாயா (இறைவனே!)" என்று வேண்டினார். அதற்குஇறைவன், "ஆம்! ஆனால் நமது இந்தக் காலத்திலுள்ள (உனது) ஜனங்களில் அக்கிரமங்கள் செய்கிறார்களே அவர்கள் அ(ந்த இனத்)தில் சேர்க்கப்பட்டவர்க ளாகார்கள்" என்று திருவுளமானான். (ஸூரா: அல்பகரா; ருகூ: 4)

### இப்ராஹீமின் (இஸ்லாம்) மார்க்கத்தை நிராகரிப்போர் மூடர்களே!

ஹஜ்றத் இப்ராஹீமின் (அசல் இஸ்லாம்) மார்க்கத்தை நிராகரித்து (விலகி விட்டு) விடுவோர், மூடர்களைத் தவிர்த்து வேறு யாராய் இருக்க முடியும்? நாமோ, அவர்களை இவ்வுலகத்தில் சிரேஷ்டமானவர்களாய் ஆக்கி வைத்திருக்தோம்; மறுமை வாழ்விலும் (ஆகிரத்திலும்) அவர்களின் பதவி நல்லோர்களில் சேரக்கூடிய தாய் இருக்தது. ஆனால் அவர்கள் (நிராகரித்து) அநியாயக்காரரானார்கள். அப்போது இறைவன் (ஹஜ்றத்) இப்ராஹீமை நோக்கி, "நீராகிலும் எமக்கு (முற்றும்) வழிபட்டவராகவும், நன்றியுடன் நடப்பவராகவும் ஆகி விடுவீராக" என்று கட்டளை யிட்டான். அதற்கு அவர்—

(இப்ராஹீம் உடன்பட்டு) "ஏ சர்வ லோகங்களுக்கும் இரக்ஷகனே, நான் (உனக்கு முற்றும்) வழிப்பட்டு நடப்பதை ஏற்றுக் கொள்கிறேன்" என்று சொல்லலானார். பிறகு (இவ்வாறே அவர்) தம் பிள்ளைகளுக்கு வஸிய்யத் (இதோபதேசம்) செய்துச் சென்றார்: இங்ஙனமே (ஹஜ்றத்) யஃகூபுங் கூட "மக்களே, நீங்கள் சாகக் கூடிய தருணத்தில் கூட (இறைவனுக்கு) வழிப்பட்டவர்களா யிருந்து கொள்ளுங்கள்" (என்று கூறிச் சென்றார்).

(ஸூரா :அல்பகரா : ருகூ: 16.)

## ஜக்கரிய்யா நபியும் தன் சந்ததிகளுக்காக பிரார்த்தித்தார்.

அப்போதே (ஹஜ்ரத்) ஜக்கரிய்யாவும், தன் இரக்ஷகனிடம் (இவ்வாறு) பிரார்த்திக்கலானார்: "ஏ எங்கள் இரக்ஷகனே, உன் னுடைய திருச்சமுக (பாக்கிய)த் திலிருந்து, எனக்கு உத்தம சந்த திகளை (புத்ர பாக்யத்தை) கொடுத்தருள்வாயாக. நீயோ, எல்லோரு டைய பிரார்த்தனைகளையும் கேட்கக் கூடியவனாக இருக்கின்றாய். இவ்வாறு (நபி) ஜக்கரிய்யா, தன் (வீட்டு) அறையில் நின்று பிரார்த் தித்துக் கொண்டுதா னிருந்தார். (அச்சமயமே) தேவதூதர்(களான மலக்கு)களின் (நற்செய்தி) சப்தம் (இங்ஙனம்) அவருக்கு கேட்க லாயிற்று: "(ஏ ஜாக்கரிய்யாவே), ஆண்டவன், உமக்கு ஓர் ஆண் மகனாக (பிறக்கப் போகும்) யஹ்யாவை (ப்பற்றி) நன்மாராயமாக அறிவிக்கின்றான். அந்த யஹ்யா (நபியாக விளங்கி) ஈஸா (நபி) வுடைய நபித்துவத்தை உண்மைப் படுத்தி வைப்பார். மேலும் அவர் ஜனங்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்குவார். பெண்(களுடைய சேர்க்கை)களை விட்டும் ஒதுங்கி (துறவியாக) யிருப்பார். இன்னும் தீர்க்கதரிசியாக விளங்குவார். ஆதலின் அவருடைய மதிப்பு நல்லடியார்களில் சேர்த்து கணிக்கப்படும்" என்பதாகும். (இதை அறிந்து) ஜக்கரிய்யா (நபி) "ஏ இரக்ஷகனே, ஆண் மகவு எனக்கு எப்படி பிறக்க முடியும்? என் மீதோ (முழுக்) கிழப்பிராயம் மூடிக் கொண்டிருக்கிறதே; மேலும் என் மனைவியோ, (ஏற்கெனவே) மலடியாக இருக்கிறாளே?" என்று (மறுத்துச்) சொல்லலானார். அதற்கு அல்லாஹ் (தஆலா) "இப்படித் தான் உமது இரக்ஷகன், தான் விரும்பியதை யெல்லாம் (தட்டின்றி) செய்து வைக்கின்றான்" என்று திருவுளமானான். (ஸூரா: ஆல இம்ரான்: ருகூ: 4.)

## நபி ஈஸாவை, இறைவன் வானில் உயர்த்திக் கொண்ட விஷயம்.

அல்லாஹ் (தஆலா, நபி) ஈஸாவை நோக்கி (இவ்வாறு) உறுதி கூறுகின்றான்: "(ஈஸாவே) உலகத்தில் நீர் வாழ்ந்திருக்க வேண்டிய தவணையை (துரிதமாக) முடித்து யாம், உம்மை எம்மிடத்துக்கு வானத்தில் உயர்த்தி (எடுத்து)க் கொள்வோம். (யூத) காபிர்களுடைய பாபக்கிருத்திய (லஃனை)த்தி லிருந்து உம்மை யாம் பரிசுத்தப்படுத்தி வைப்போம். எனவே, (பிறகு) யார் உம்மை (உமது உபதேசங்களை)ப் பின்பற்றி நடப்பார்களோ அவர்களை யாம், கியாமத்து (உலக முடிவு) நாள் வரைக்கும், நிராகரித்த அந்த (யூதக்) கூட்டத்தார் மீது மிகைப்பானவர்களாகச் செய்து வைப்போம். (எ ஜனங்களே!) நீங்கள் எல்லோரும் இறுதியில் எம்மிடம் தான் (மரித்துத்) திரும்ப வந்து சேர வேண்டும். அப்போது, நீங்கள் (உலகில் தமக்குள் ஹஜ்றத் ஈஸாவைப் பற்றி) எந்த விஷயங்களில் விகல்பப்பட்டிருந்தீர்களோ அதில் யாம், அப்போது தீர்ப்புச் செய்து வைப்போம். (ஸூரா: ஆலஇம்ரான்: ருகூ: 6.)

## நபி ஈஸாவின் பிறப்பு உவமானம் நபி ஆதமைப் போன்றதாகும்.

சந்தேகமில்லாமல். ஈஸா (நபி) வுடைய உவமானம், இறைவனிடத்தில், (நபி) ஆதமுக்கு ஒப்பாக (சிருஷ்டிப்பில்) இருக்கின்றது, (எவ்வாறெனில்) அவரை இறைவன் (ஆதியில் தந்தை யாருமின்றி) மண்ணிலிருந்து (உருவம்) சிருஷ்டித்தான்; பிறகு அதை நோக்கி நீ (உயிருள்ள மனிதனாக) 'ஆய் விடு' என்று சொன்னான். அது (அவ்வாறே) ஆய் விட்டது. இது வாஸ்தவமான விஷயமாகும். (நபி ஈஸாவின் சிருஷ்டிப்பும் இப்படித்தான்.) எனவே உங்கள் இரக்ஷகனின் (சிருஷ்டிப்பு) விஷயத்தில் சந்தேகம் கொள்கிறார்களே அப்படிப்பட்ட (நாஸ்திக) ஜனங்களில், (முஸ்லிம்களே) நீங்களும் ஆய்விட வேண்டாம். (ஸூரா: ஆலஇம்ரான்: ருகூ: 6)

## நபி ஆதமுக்குப் 'பணிவு' செய்யாததால் ஷைத்தான் தண்டனை பெற்றான்.

(இறைவனாகிய) யாம், உங்களை-(அதாவது) உங்கள் யாவரின் தந்தையாக ஆதமை, (அபூர்வமாக) சிருஷ்டித்தோம். எனவே

(முதலில்) உங்கள் தந்தை ஆதமின் அழகிய-(கவர்ச்சிகரமான) உருவத்தை உண்டாக்கினேம். பிறகு யாம் (தேவதூத) மலக்குகளை நோக்கி, "இந்த (மனித) ஆதமுக்கு ஸஜ்தா (என்னும் பணிவு) செய்யுங்கள்" என்று சொன்னேம். எனவே எல்லா தேவதூத (கிங்க)ர்களும் 'பணிவு' செய்தார்கள். ஆனல் (ஷைத்தானன) இப்லீஸ் மட்டும் (முடியாதென) விலகிக் கொண்டான். அப்போது இறைவன் "(இப்லீஸை நோக்கி ஆதமுக்கு ஸஜ்தா செய்யுமாறு) 'யாம் கட்டளை யிட்டோமே; அங்ஙனம் நீர், ஸஜ்தா செய்யாதிருக்க எந்த விஷயம் உன்னைத் தடுத்துக் கொண்டது? (காரணம் என்ன?)" என்று கேட்டான். அதற்கு இப்லீஸ் சொல்லலானன்: "நான் இந்த ஆதமைவிடச் சிறந்தவனக இருக்கிறேன்; ஏனெனின், என்னை நீ அக்கினியினல் சிருஷ்டித்திருக்கிருய்; இந்த ஆதமை (கேவலம்) மண்ணினல் (உண்டாக்கினய்" என்று பெருமையடித்துக் கொண்டான்). ஆகையால் ஆண்டவன் (அவன் மீது முனிவு கொண்டு "ஏ ஷைத்தானே!) நீ இவ்விடத்(து சுவர்க்கத்)தை விட்டுக் கீழே (பூமிக்குப்) போய் விடுவாயாக; இங்கிருந்து பெருமையடித்துக் கொண்டிருக்க உனக்கு யோக்யதை யில்லை. புறப்பட்டு விடு; நீ மகா கேவலமானவனுனய்" என்று கடிந்துரைத்தான். அதைக் கேட்டு ஷைத்தான் "இறைவனே! தண்டனை அனுபவிக்க எனக்கு உலக முடிவு (கியாமத்து) நாள் வரை போதிய சந்தர்ப்பம் கொடு" என்று வேண்டிக் கொண்டான். "சரி, அப்படியே சந்தர்ப்பம் அளிததேன், போ" என்று இறைவன் திருவுளமானன். அதன் பின்னும் ஷைத்தான், "இறைவனே! நீ என்னை (இந்த மனிதன் பொருட்டால்) சினந்து விரட்டிவிட்டாய். இந்த (மாந்தரில்) நேரான மார்க்கத்தின் (ஹிதாயத்தின்)படி நடக்கும் உன்னுடைய நல்லடியார்களை (யெல்லாமும்) தாக்கி வழி கெடுப்பேன்; இன்னும் நான் அவர்களை முன்னும் பின்னும், வலதும் இடதும் சூழ்ந்து, (பாபத்தின் பால்) ஊக்குவித்து (வழி) கெடுப்பேன். எனவே (என்னல்) அவர்களில் பெரும்பாலோரை—உனக்கு நன்றி கெட்டு மாறு செய்தவர்களாகக் காண்பாய்" என்று (சபதம்) கூறி நின்றுன். எனவே இறைவன் "(சீ) நீ இங்கிருந்து (ஓடிப்) போய்விடு; சீர்கெட்டவ னுய்விடு; விரட்டப்பட்டவனுய்ப்போ! ஞாபகமிருக்கட்டும்; (மாந்தரின்) யார் (உன் மாய வலையில் வீழ்ந்து) உன்னை

பின்பற்றி யுழல்வார்களோ, அவர்களைக் கொண்டே யான் நரகலோ கத்தை நிறப்புவேன்" என்று சொல்லி விட்டான்.

(ஸூரா: அல்அஃராப்; ருகூ: 2)

## பாவா ஆதமை, இப்லீஸ் முதலில் ஏமாற்றி வைத்தான்.

இறைவனாகிய யாம், (முதல் மனிதராகிய) ஆதமை நோக்கி "ஏ ஆதமே! நீரும் உமது மனைவி (யாகிய ஹவ்வா)வும், சுவர்க்கத்தில் (சந்தோஷமாய்) வாசம் செய்து கொண்டிருங்கள்; (இஷ்டப் பட்ட பிரகாரம்) எதிலிருந்தும் (எடுத்து) புசியுங்கள்; பருகுங்கள்; (சுகியுங்கள்; ஆனால்,) இந்த (கோதுமை) விருக்ஷத்தின் அருகில் மட்டும் செல்லாதீர்கள். இன்றேல், நீங்கள் (சுயமே) நஷ்டவாளி யாய்ப் போய் விடுவீர்கள்" என்று சொல்லி வைத்தோம். ஆயினும் (விரட்டப்பட்ட) ஷைத்தானானவன், (முதலில்) அவர்களையே ஏமாற்றி (வழி கெடுத்து) விட்டான். (அதாவது இப்லீஸ் சொற் கேட்டு ஹவ்வாவும் ஆதமும், கோதுமையைத் தின்றதனால்) வெட்கம் இன்னதென உணரலானார்கள்; (அதாவது அவர்களுக்கு அது காறும் புலனாகாதிருந்த அவர்களுக்குரிய வெட்க ஸ்தானம் அவர்களுக்கு வெளிப்படையாகத் தொடங்கியது.) அப்போது ஷைத்தான், அவர்களை(ப் பரிவுடன்) நோக்கி "உங்கள் இறைவன் உங்களை இந்த (அரிய) விருக்ஷத்தை விட்டு விலக்கி இருக்கிறானே, அதன் காரணம் யாதெனில் (சொல்கிறேன்; கேளுங்கள்): நீங்கள் இருவரும் இந்த விருக்ஷத்தின் (தானியக்) கனியைப் புசித்து விடுவீர்களாயின், மலக்குகளாய் உயர்ந்து விடுவீர்கள்; அல்லது நீங்கள் சாஸ்வதமான அமர ஜீவியம் பெற்றுக் கொள்ளக்கூடாதே என்பதுதான் என்று சொல்லி மேலும், பிரமாணம் செய்து (கட்டாயம் இதை நீங்கள் புசியுங்கள்;) நான் உங்கள் (நன்மை கோரும்) உபகாரியாக இருக்கிறேன்" என்றான். இவ்வாறு அவன் (ஆதம் தம்பதியரை) ஏமாற்றி, அந்த விருக்ஷக்கனியை புசிக்கும்படியாகச் செய்து விட்டான். எனவே, அவ்விருவரும் அவ்விருக்ஷத்துக் கனியை புசித்ததும் அவர்கள், தம் (வெளிப் படையான) வெட்கஸ்தானங்களை, சுவர்க்கவனத்து இலைகளை எடுத்து சரீரத்தில் வைத்து மறைக்கத் தொடங்கினார்கள். இந்த(ச் சீர்குலைவான) நிலைமையைக் கண்டு அவர்களின் இறைவன், அவர்களை மிரட்டி "இந்த விருக்ஷத்தின் பலனை புசிக்காதீர்கள் என்று நான்

உங்களை எச்சரிக்கவில்லையா? அந்த ஷைத்தான் உங்களுடைய கடுமையான (பகிரங்க) விரோதியாவன் என்று எச்சரிக்கவில்லையா?'' என்று அறிவுறுத்தினான். அப்போது (ஆதம், ஹவ்வா) இருவரும் (இறைவனிடம் வேண்டி) "எங்கள் இரக்ஷகனே! எங்களை நாங்களே (கெடுத்து) அநியாயஞ் செய்து (அழித்துக்) கொண்டோம். இனி நீ எங்கள் மீது கருணை புரியாதிருந்து விட்டால், நாங்கள் (மேலும்) சீரழிந்துப் போய் விடுவோம்'' என்று கோரிக் கொண்டனர். ஆகவே, இறைவன் அவர்களை நோக்கி, "(அப்படியானால்) நீங்கள் (இந்த) சுவர்க்கத்தை விட்டு இறங்கி (பூலோகத்துக்கு)ப் போய்விடுங்கள். இனி (ஷைத்தானும், மாந்தராகிய நீங்களும்), ஒருவருக்கொருவர் பகைவர்களாய் கிடந்துழலுங்கள். இனி மரண பரியந்தம் பூலோகத்திலேயே (ஜீவித்துக் கொண்டு) இருங்கள்; பூலோகத்தின் பாக்யங்களை அனுபவித்துக் கொள்ளுங்கள். இறுதியில் அதிலேயே நீங்கள் மரணித்துப் போங்கள். பிறகு கியாமத்து நாளில் அங்கிருந்தே மீண்டும் (உயிர்ப்பித்து) மறுமுறை (ஜீவனோடு) எழுப்பப்படுவீர்கள்'' என்று திருவுளமானான்.

(ஸூரா: அல்அஃராப்; ருகூ: 2)


## ஸூறத்து யாஸீனும், துஆவும்

யாஸீன் ஸூராவுடைய அரபு ஆயத்துக்களைத் தமிழ் எழுத்தைக் கொண்டு திருத்தமாய் ஓதும்படியான அமைப்புகளுடையதாகும் இந்த கிதாபு. இதில் பெரிய துஆவும், பாத்திஹா ஓத வேண்டிய தர்த்தீபுகளும், ஒவ்வொரு விஷயத்திற்கும் ஓத வேண்டிய துஆக்களும் தல்கீனும் அதன் தர்ஜுமாவும் அத்துடன் நாகூர் ஆண்டவர்கள் பேரில் அஸ்மாவுல் இலாமும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது.

விலை அணா. 0–7–0

அறபு யாஸீன் விலை அணா. 0–1–6

அறபு யாஸீன் அஸ்மாஉல் இலாமுடன் விலை அணா. 0–2–0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
கெ.20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# மூளை பலத்தால் முன்னேறியவர்.

## 'ஹென்ரி போர்டின்' வரலாறு:

**1914-ம்** வருடத்திலே ஒரு நாள்—ஞாயிற்றுக்கிழமை யன்று-டெட்ராயிட்டிலிருந்து கிடைத்த செய்தி, அமெரிக்கத் தொழில் உலகிலே பரபரப்பும் படபடப்பும் ஏற்படுத்தியது; பாருலகம் முழுவதிலும் பிரமிப்பும் பிரமையும் தோற்றுவித்தது. அமெரிக்கத் தொழிற்சாலைகளிலே வேலை செய்து வந்த சிப்பந்திகளுக்கு அந்த சமயத்திலே தினம் இரண்டு டாலர் கூலி அளிக்கப்பட்டு வந்தது. அவர்களது வேலை நேரமும் தினம் ஒன்பது மணி நேரமாக இருந்து வந்தது. தொழிற்சாலை சிப்பந்திகளின் குறைந்தபக்ஷ கூலியை ஐந்து டாலராக அதிகரித்ததோடு அவர்களது வேலை நேரத்தையும் தினம் எட்டு மணி நேரமாக ஹென்ரிபோர்டு அறிவித்தார்.

இவ்வித திடீர் புரட்சிகர அறிவிப்பின் விளைவாக டெட்ராயிட்டில் தொழிலாளர்கள் நிறைந்து அந்நகரம் நாசமாகிவிடு மென்பதாகவும் போர்டு அறிவித்துள்ளபடி கூலி அளிப்பவர்கள் பாரியாகப் போய் விடுவரென்பதாகவும் போர்டு கம்பெனி இல்லா தொழிந்து போகுமென்பதாகவும் திடீர் சம்பள அதிகரிப்பின் விளைவாக போர்டு தொழிற்சாலை சிப்பந்திகள் ஒழுக்கங்குன்றிப்போய் பணம் செலவு செய்யும் வகை அறியாமல் தாறுமாறாக, தான்தோன்றித்தனமாக அவர்கள் நடந்து கொள்வரென்பதாகவும் ஹேஷ்யங்களும் ஜோஷ்யங்களும் கூறப்பட்டன.

இந்த ஹேஷ்ய—ஜோஷ்யங்கள் பற்றி வினவப்பட்டபோது, சாந்தமாகவும் சாவகாசமாகவும் போர்டு அளித்த பதில் இதுதான் தரைபெருக்கும் தொழிலாளி அவனது வேலையில் உற்சாகமும் ஊக்கமும் காட்டினால் சிறு சாமான்களை உதவாக்கரை எனப் பெருக்கி குப்பையில் போட்டு விடுவதற்குப் பதிலாக அவற்றைப் பொறுக்கிப் பத்திரப் படுத்தி வைப்பதன் மூலம் தினம் ஐந்து டாலர்களை அவன் மிச்சப் படுத்திக் கொடுக்க முடியும்.

பிற்காலத்தில் பின்வருமாறு அவர் எழுதினர்: தொழிலாளர்களின் குறைந்தபக்ஷ கூலியை ஐந்து டாலராக அதிகரித்த சமயத்திலிருந்து எங்கள் கம்பெனியின் முன்னேற்றம் துவங்கியது. எனெ

னில், அதன் மூலம் எங்கள் சிப்பந்திகளின் வாங்கும் சக்தியை நாங்கள் உயர்த்தினோம். அவர்களும் மற்ற மக்களின் வாங்கும் சக்தியை அதிகப்படுத்தினர். இவ்வாறாக நாட்டு மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்தது. (தொழிலாளர்களுக்கு) அதிக கூலி அளித்து, (பொது மக்களுக்குக்) குறைந்த விலையில் விற்பனை செய்வதன் மூலம் வாங்கும் சக்தியை அதிகரித்ததே அமெரிக்காவின் சுபிக்ஷத்துக்கு மூலகாரணம்.

ஐந்து வருடங்களுக்குப் பிறகு தொழிற்சாலை சிப்பந்திகளின் அன்றாட குறைந்தபக்ஷ கூலியை ஆறு டாலராக அதிகரித்தபோது அவர் சொன்னார்: தினம் எட்டு மணி நேரம் வேலைக்கு ஐந்து டாலர் கூலி அளித்தது, நாங்கள் எடுத்துக் கொண்ட உற்பத்திச் செலவு குறைப்பு நடவடிக்கைகளில் மிக நேர்த்தியானது. தினம் ஐந்து டாலருக்குப் பதில் ஆறு டாலர் கூலி கொடுப்பதால் உற்பத்திச் செலவு இன்னும் குறைகிறது.

தகுந்த கூலி, விலைபற்றி அவர் தந்த விளக்கவுரை வருமாறு: தகுந்த விலை என்பது போக்குவரத்து சாதனத்தை உபயோகிக்கும் பொது மக்கள் தாங்கக் கூடிய அளவு அல்ல. தகுந்த கூலி என்பது குறைந்த பக்ஷம் எவ்வளவு பணத்துக்கு ஒரு மனிதன் வேலை செய்வானோ அவ்வளவு பணம் அல்ல. (மாறாக), தகுந்த விலை என்பது குறைந்த பக்ஷம் எந்த விலைக்கு ஒரு சாமானை நிலையாக விற்பனை செய்து வரமுடியுமோ அந்த விலை ஆகும். தகுந்த கூலி என்பது ஒரு முதலாளி நிலையாக அதிக பக்ஷம் எவ்வளவு செலுத்தி வரமுடியுமோ அந்தக் கூலி ஆகும்.

ஹென்ரி போர்டு கடைப்பிடித்த தங்கு தடையில்லா தாராளத் தயாளக் கொள்கை அமெரிக்க சூழ்நிலையில் பரிபூரண வளர்ச்சி அடைந்தது; வேறு எந்த சூழ்நிலையிலும் அது அபிவிருத்தி அடைந்திராது. மற்றவர்களுக்காகச் சாமான்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள தனி முதலாளி தமது சுயநல நோக்கத்தை நிறைவேற்றுவதில் கண்ணுங் கருத்துமாக இருக்கிற போதிலும் பொது நலச்சேவை புரிவது திண்ணம் என்ற சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டதே அவரது கொள்கை. பலவீனமான, பக்கபலமில்லா பொருள்களிடத்தில் இயற்கை குரூரமாக இருப்பதை போல இம் முறை குரூரமானது. ஆயினும், அது சுமுகமாக இயங்கியது.

மானிட வர்க்க சரித்திரத்திலே அரும் பெரும் சாதனையை அமெரிக்காவிலே அது தோற்றுவித்தது.

இயற்கை உணர்வு, தூரதிருஷ்டி மூலம் பிரமிப்பூட்டும் வகையில் செயலாற்றிய, இயந்திர உலகமேதை ஹென்ரி போர்டின் கண் கொண்டும் அவரது சாதனைகளை அளவு கோலாகக் கொண்டும் இந்த முறையை நாம் கவனிப்போமாக.

ஹென்ரி போர்டின் காலத்துக்கு முன்பு செல்வந்தர்களின் ஏக போக உரிமையாகவே மோட்டார்கார் இருந்து வந்தது. மாடல் 'T' கார் பற்றிய அவரது பகிரங்க அறிவிப்பு பின் வருமாறு இருந்தது: சாமானிய மக்களுக்கான மோட்டார் காரை நான் தயாரிப்பேன். ஒரு குடும்பம் ஏறிச் செல்வதற்குப் போதுமான இடவசதி கொண்டதாக அது இருக்கும். ஆனால், ஒரு தனி நபர் கவனித்துக் கண்காணித்துக்கொள்ளு மளவுக்கு அது சிறு சாதனமாக இருக்கும். மிகச் சிறந்த தளவாடங்களைக் கொண்டு கைதேர்ந்த தொழிலாளர்களால் நவீனகால எஞ்சினீரிங் கண்டு பிடிக்கும் மிகச் சுலபமான சூத்திரங்களின்படி அது தயாரிக்கப்படும். நல்ல வருமானமுடைய எந்த நபரும் எளிதில் வாங்கி, இறைவனின் அருட்கொடையான விஸ்தாரமான திறந்த வெளிகளிலே தமது குடும்பத்தாருடன் உல்லாசமாகப் பிரயாணம் செய்வதற்கு வசதியாக அதன் விலையும் மிக மலிவாக இருக்கும்.

விசை உற்பத்திக் கருவி (Power Plant) சட்டம் (Frame) முன் இருசு, பின் இருசு ஆகிய நான்கு முக்கிய உறுப்புகளைக் கொண்டதாக மாடல் 'T' கார் இருந்தது. இவற்றை பழுது பார்ப்பதற்கோ அல்லது இவற்றுக்குப் பதிலாக வேறு உறுப்புகளைப் பொறுத்துவதற்கு விசேஷத் திறமையோ அல்லது அதிக பணச் செலவோ தேவைப்படா வண்ணம் இவை உருவாக்கப் பெற்றிருந்தன. 'ஸ்பானர்' சிறு குறடு ஆகியவற்றுடன் மாடல் 'T' சொந்தக்காரர்கள் கார் ஓட்டிச் சென்று, உபயோகிக்கப்பட்ட அல்லது பழுதடைந்த உறுப்புகளைக் கோணிப் பையில் போட்டு அருகிலுள்ள போர்டு நிலையத்துக்கு அந்தப் பையை எடுத்துச் சென்றதும், பழைய வற்றுக்குப் பதிலாக புதிய உறுப்புக்கள் அங்கு பொருத்தப் பெறும். இதற்காகக் கார் சொந்தக்காரர்கள் மிகச் சொற்ப பணம்தான் செலுத்த வேண்டி யிருந்தது. இவ்வாறு கார் சொந்தக்காரர்களிட மிருந்து

திரும்பப் பெறப்பெற்ற உபயோகிக்கப்பட்ட, பழுதடைந்த உறுப்பு களைச் சீர்ப்படுத்தி மேலும் அதிகமாக மாடல் 'T' கார்கள் திரும்பத் தயாரிக்கப்பட்டன. பெரிய மரங்களுக்கு அடியில் நிழலுள்ள பகுதிகளிலும் திறந்த வெளி கிடங்குகளிலும் ஷெட்டுகளிலும் கார்கள் திரும்பக் கட்டப்பட்டன. இந்த கார்கள் அந்தக் காலத்தில் வாழ்ந்த மக்களிடையே எவ்வளவு பெரிய மாறுதலை தோற்றுவித்தது என்பதை இக்காலத்தவர் உணர்ந்து கொள்வது முடியாத காரியம். இவ்வித இயந்திர மிருகம் இதற்கு முன்பு இருந்ததில்லை; இனியும் இதைப்போன்றதைக் காண்பது அரிது. அமெரிக்க மக்களின் பழக்க வழக்கங்களிலே அது பெரும் மாறுதலைத் தோற்று வித்தது.

பத்தொன்பது வருடங்களில் ஒரு கோடியே ஐம்பது லட்சம் மாடல் 'T' கார்களை ஹென்ரி போர்டு தயாரித்ததோடு, கார் விலையை ஆயிரத்து இருநூறு டாலரிலிருந்து இருநூற்றுத் தொண்ணூற்றைந்து டாலராக அவர் குறைக்கவும் செய்தார்.

போர்டு கம்பெனி ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து மற்ற சிறந்த கார்கள் இருக்கத்தான் செய்தன. போர்டு கம்பெனி கட்டி முடித்த முதல் காரில் மற்ற கம்பெனிகளுக்குத் தெரியாத புதிய அம்சம் அல்லது இலட்சியம் எதுவும் இருக்கவில்லை. பின்னர் லட்சக் கணக்கில் கட்டி முடிக்கப்பட்ட போர்டு கார்களிலும் புதிய அடிப் படை சித்தாந்தம் எதுவும் இருக்கவில்லை. அக்கம்பெனியின் செயல் முறைதான் அதற்குத் தனித்தன்மை அளித்து மற்ற கம்பெனி களை விட அதற்குச் சிறப்பு அளித்தது.

கார் விலையைக் குறைக்க வேண்டுமென்பதில் போர்டு செலுத்திய ஆர்வத்தின் காரணமாக அவரது எஞ்சினீர்களும் மானேஜர்களும் கடுமையாக உழைக்க வேண்டியதாயிற்று. சில சமயங்களிலே அடக்க விலைக்கும் குறைவாக விற்பனை விலையை ஏற்படுத்தி, அந்த விலையிலும் லாபம் கிடைக்கச் செய்கிறார்களா என தமது ஆட்களை அவர் கவனித்து வருவார். அவர்களும் உற்பத்திச் செலவைக் குறைத்து குறைவான விலைக்கு விற்பனை செய்தாலும் லாபம் கிடைக்குமாறு செய்தனர்.

போர்டும் அவரது எஞ்சினீர்களும் இதர தொழில் நிபுணர் களும் வேலையை விளையாட்டாகப் பாவித்து உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் உழைத்தனர். இவ்வாறு வேலையில் உற்சாகம்

காட்டியிராவிடில், அவர்கள் செய்த வேலை அவர்களைக் கொன்றிருக்கும். உன்மத்தம் பிடித்தவர்களைப் போல அவர்கள் உழைத்தனர். சாப்பாட்டைக்கூட அவர்கள் அடிக்கடி மறந்து விடுவதுண்டு. கடுமையாக உழைக்குமாறு தொழிலாளர்களைத் தூண்டி விட்டு எஞ்சினீர்களும் மிகக் கடுமையாக உழைத்தனர். இயந்திரங்களுக்கு வலி யுற்படும் வரையில் அவற்றை அவர்கள் அதிக நேரம் இடைவிடாமல் இயங்க வைத்தனர்.

ஒரு சமயம் விசேஷ இயந்திர மொன்று தயாரிப்பதற்காக போர்டு தொழிற் சாலைக்குச் சில தொழிலறிஞர்கள் தருவிக்கப்பட்டனர். ஒருமணி நேரத்துக்கு இருநூறு முழு உறுப்புகளைத் தயாரித்துக் கொடுக்குமாறு அவர்களைக் கோரப்பட்டது. இயந்திரம் கட்டுபவர்கள் உடனே பின் வருமாறு பதில் கூறினர்: நீங்கள் தவறு இழைத்து விட்டீர்கள். ஒருநாளைக்கு இருநூறு முழு உறுப்புக்கள் தயாரித்துக் கொடுக்க வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்கள் போலும்.

திட்டம் தீட்டிய போர்டு எஞ்சினீர் கூறினர்: "திட்டத்தில் தவறுதல் எதுவும் கிடையாது. மணிக்கு இருநூறு முழு உறுப்புகள் தான் தயாரித்தாக வேண்டும்" என்றார்.

எந்த இயந்திரத்தாலும் அவ்வளவு விரைவாக உறுப்புக்களைச் செய்து முடிக்க முடியாது என இயந்திரம் கட்டுவோர் கூறியதன் பேரில் எஞ்சினீர் பின்வரும் தகவலை வெளியிட்டார்: இந்த இயந்திரங்களைச் செய்து தருமாறு உங்களைக் கேட்கும் முன்பு, நாங்களே அதைப் போன்ற இயந்திரம் தயாரித்து, அது சுமுகமாக இயங்குகிறதா என பரிக்ஷித்துப் பார்த்தோம். அது இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனை வந்து பாருங்கள். (தொடரும்)


வல்லப நாச்சியார்

இது துப்பறியும் ஓர் இனிய நாவல். படிக்கப் படிக்க மிக ருசிகரத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கக் கூடிய அழகிய கதை. இதன் விலை ரூ. 1—9—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இனாம்! இனாம்!!

## ஹமீதிய்யா முஸ்லிம்

## காலண்டர் 1956

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

எங்களிடமிருந்து ஒரே நேரத்தில் எங்களது சொந்த பிரசுரங்களுள் ரூபாய் 10க்கு குறைவில்லாமல் சொந்த உபயோகத்திற்கு கிதாபு, புஸ்தகம் தருவிப்பவர்களுக்கு ஷை காலண்டர் ஒன்று (எங்களிடம் காலண்டர் ஸ்டாக் யிருக்கும் வரை) இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும்.

---

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இமாம் அபூஹனீபா (ரஹ்) தீர்ப்பு.

ரஹ்மத்துல்லா-மஆலி (பாகவி)

நான்கு இமாம்களுள் இமாம் அபூஹனீபா (றஹ்) அவர்கள் தான், முதன் முதல் முஸ்லிம் சமூகத்தின் இஸ்லாமிய அனுஷ்டானச் சட்டதிட்ட ஒழுங்கு முறை என்னும் பிக்ஹு மஸ்அலாவுக்கு, குர்ஆன் ஹதீது ஆதாரங்களைக் கொண்டு வழி கோலியவர்கள்.

அதற்குமுன் முஸ்லிம்கள் தங்கள் தீனுடைய அனுஷ்டான காரியங்களில் தத்தம் அறிவாற்றலுக்கேற்ப 'கியாஸ்' என்னும் அனுமானம் கொண்டும், திருக் குர்ஆன் வசன ஆதாரத்தைக் கொண்டும், ரிவாயத் என்னும் ஹதீதில் தங்களுக்கு இணக்கமானதை மட்டும் ஏற்றுக்கொண்டும் அனுஷ்டானம் புரிந்து வந்தார்கள்.

எனவே, அக்காலத்தோர் 'அஹ்ல குர்ஆன்' களாகவோ, 'அஹ்லெ ஹதீது' களாகவோதான் இருந்து வந்தனர் என்று சொல்ல வேண்டும் "எங்களுக்கு குர்ஆன் என்னும் தலீலும் ஹதீதுஎன்னும் ஸுன்னத்துமே போதும்" என்று வெகுபேர் அனுஷ்டானம் புரிந்து வந்தார்கள். எனவே, மத விஷயங்களில், பலசமயங்களில் விகல்பங்களும் தகராறுகளும் பிரச்சனைகளும் சிக்கல்களும் நேரிடுவதுண்டு. எந்தத் தாபிஊனும், தபஉ தாபியீனும் இஸ்லாமிய ஷரீஅத்தில் சீர் திருத்தம் காணவேண்டுமென்ற தைரியம் கொள்ளவில்லை.

## பிக்ஹு என்பது என்ன?

பிக்ஹு என்பது, குர்ஆன் கட்டளைகளும் ஹதீதுபோதனைகளுமல்லாத புதுவிதமான கற்பனைச்சட்ட திட்டங்களல்ல. நேரடியாகத் தெளிவாய் குர்ஆன் ஹதீது வாக்கியங்களின் உட்கருத்துக்களையும், ஆழிய தத்துவம் மிக்க சூழ்நிலைச் சம்பவ வரலாற்றையும் அறிந்தாராய முடியாத பாமர ஜனங்களுக்கு, தலீல்—ஹதீஸ் படி எப்படி நடக்க வேண்டும், எதையெதை எங்ஙனம் அனுஷ்டிக்கவேண்டும் என்ற வழி முறைகள் வகுக்கப்பட்ட ஒருவித "சட்டக்கலை" (Law Book) தான் பிக்ஹு என்பது எனக்கூறினால் மிகவும் பொருந்தும்.

இக்காலை, சிவில்-லா, கிரிமினல்-லா என்ற சட்டக் கலைகள் இல்லாமற் போயிருந்தால், மனிதர் வாழ்வில், இகவாழ்வு சம்பந்தமாய் என்னென்ன சச்சரவுகளும் பிணக்குப் போராட்டங்களும் உண்டாய் நாசமுறவேண்டியிருக்குமென்பது சொல்லியாக வேண்டியதில்லை.

இலௌகிகம் என்னும் லோக வியவகாரங்களுக்கு சிவில், கிரிமினல் லா-பாயிண்ட்டுகள் வகுக்கப்பட்டிருப்பது போல்தான் அக்காலத்திலும், இஸ்லாமிய மக்களுக்கு, குர்ஆன் ஹதீதுக்கு ஒத்த முறையில் 'சட்டக்கலை' வேண்டியிருந்தது. அதன்பெயர்தான் 'பிக்ஹு' என்று வழங்கலாயிற்று.

## இமாம் அபூ ஹனிபாவின் மேதை.

அக்காலே இஸ்லாமிய கிலாபத் ராஜ்யாதிகாரம்தான் நடைபெற்றுக்கொண்டிருந்தது. கலீபாவின் கட்டளைப்படி, காஜீகளும் இருந்து, மதவிஷயங்களில் மக்களுக்குள் உண்டாகும் சிக்கல்களையும் தகராறுகளையும் சுமுகமாக தீர்த்து வைககபாடுபட்டுத்தான் வந்தார்கள்.

அப்படியிருந்தும் சில சமயங்களில், கலீபாவின் அறிவுக்கும் காஜீ சாஹிபின் யுக்திக்கும் மீறிய விதங்களில் சில வியவகாரங்கள் தோன்றி விடுவதுண்டு. அக்காலத்தில், மாலிக்கி, ஹன்பலி, ஷாபிஈ ஆகிய இமாம்கள் இருக்கவில்லை. இமாம் அபூஹனிபா மட்டும்தான, இதா ஆலிம் உலமாக்களைப்போல். ஆனால் அவர்களுக்கெல்லாம் தலைமையாய் சிறந்த முறையில், குர்ஆன் ஹதீது ஆதாரங்களைக்கொண்டும் இஜ்மாஃ-கியாஸ் என்னும் அறிவு அனுமானும் கொண்டும் சமுதாயத் தீர்ப்பு முறைக்கான அனுஷ்டான வழிகளை வகுத்து, கிரந்தங்கள் இயற்றிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது, ஓதிப்படித்த ஆலிம்களும், ஓதிப்படிக்காத பாமரர்களும், அதிகார பீடத்திலிருந்த அதிகாரிகளும், மக்கள் வாழ்வில் நேரிடும் பிரச்னைகளையும் விவகாரங்களையும் தெளிந்தறிந்துகொள்வதற்காக இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களுடைய திருச்சமுகத்துக்கு வருவார்கள். இமாம் அவர்கள் அளிக்கும் தீர்ப்பை, மனமுவந்து ஏற்றுச் சென்று நல்லனுஷ்டானம் புரிவார்கள்.

### ஒரு சம்பவக் கதை

'உகூதுல் அகியான்' நூலின் ஆசிரியர், தமது, ஒரு பழைய இத்தாபில், பின்வரும் சம்பவ மொன்றை கிஸ்ஸாவைப்போல் எழுதி, இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களின் மேதையை விளக்கி யிருக்கின்றார். அதாவது:

இரண்டுபேர், பொது ஸ்நான விடுதியாகிய ஹம்மாமில் குஸ்லு செய்வதற்காகப் போனார்கள். ஸ்நான விடுதி (Bath Room Manager) அதிகாரியான ஹம்மாமிடம், தங்கள் மேல் உடைகளையும் சில விலை மதிப்புள்ள பொருட்களையும் வைத்திருக்கும்படி 'அமானத்தாக' கொடுத்துவிட்டு உள்ளே குளிக்கப்போனார்கள்.

இரண்டு பேர்களில் ஒருவன் சிறிது நேரத்தில் ஹம்மாமிடம் வந்து, "எங்கள் பொருட்களைக் கொடு" என்று அனைத்தையும் கேட்டான். ஹம்மாமி முன்பின் யோசிக்காமல், பொருள் அனைத்தும் அவனிடம் கொடுத்து விட்டான். அவன் வாங்கிக் கொண்டுபோய் விட்டான்.

சிறிது நேரம் சென்றபின், மற்றவனும் வந்து "என்னுடைய உடைகளையும் அமானத் பொருட்களையும் கொடு" என்று கேட்டான். அதற்கு ஹம்மாமி, "உன்னுடைய தோழன் சிறிது நேரத்துக்கு முன்பு தான் வந்து எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு போய் விட்டான்" என்று சமாதானம் சொல்லலானான். அனால், அந்த மனிதன் அதை ஒப்புக்கொள்ளாமல், "என்னுடைய பொருளை என்னிடம் ஒப்புக்கொடு; அவனைப்பற்றி எனக்கென்ன ஆகவேண்டியிருக்கிறது. இன்றேல், காஜீயிடம் உன்பேரில் வழக்கு தொடுக்கிறேன்" என்று சொன்னான்.

அதன்படியே காஜீசாஹிபிடம் ஒரு வழக்குபோயிற்று. காஜீ சாஹிப், வாதியின் வாக்குமூலத்தை பெற்று யோசித்துப் பார்த்தார். ஹம்மாமி சொன்ன சமாதானத்தையும் யோசித்துப் பார்த்தார். அவரால் ஒழுங்காக எவ்வித முடிவுக்கும் வரமுடியவில்லை. ஆனால், ஒரு தலைப்பக்ஷமாய் அவர் ஹம்மாமிக்குப் பாதகமாக, தீர்ப்பளிக்க முனைந்தார்.

அதாவது: "ஏ அதிகாரியே, பிரஸ்தாப இரண்டுபேரும் ஸ்கானம் செய்ய வந்தபோது, உடைகளையும் பொருட்களையும் உன்னிடம் கொடுத்து என்ன கூறினர்: 'இதை வைத்துக்கொள்; நாங்களிருவரும் குளித்துவிட்டு வந்து வாங்கிக் கொள்கிறோம்' என்று சொன்னார்களல்லவா? அதன்படி அவர்கள் இரண்டுபேர்களும் ஒன்று சேர்ந்து, கூட்டாக வந்தார்களா? இருவரில் ஒருவன்தானே வந்து கேட்டான்! எப்படி நீர் கொடுக்கலாம்?" என்று தீர்ப்புச் சொல்லி, எளிய ஹம்மாமியை காஜிசாஹிப் மிரட்டிவிட்டார்.

ஒரு குற்றமும் செய்தறியாத அந்த ஹம்மாமி, 'இதென்னடா சங்கடம்' என்று திக்பிரமை யடைத்து, சிக்கலான இவ்விவகாரத்தை அக்காலத்து மாபெரும் ஆலிமாக விளங்கிய இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களிடம் சென்று முறையிட்டுக்கொண்டான்.

இமாம் சாஹிப் அவர்கள், யுக்திக்கு குயுக்தியாக ஒரு மஸ்அலாவை கற்பித்துக் கொடுத்தார். அதாவது, ஹம்மாமியை நோக்கி, "ஐயா, நீர் பயப்படவேண்டியதில்லை; உன் மீது வழக்குத் தொடுத்தவனுடைய வாதம் சரியல்ல. அவர்கள் இருவரும், உன்னிடம் உடைகளையும் சாமான்களையும் கொடுத்து வைக்கும்போது என்ன கூறினர்; "நாங்கள் இருவரும் குளித்துவிட்டு வந்து வாங்கிக்கொள்கிறோம்" என்று சொன்னார்களல்லவா? அங்ஙனம் இருவருமாக சேர்ந்துவந்து கேட்டார்களா? இல்லையே! ஒருவன்பின் ஒருவன் மட்டுமாகத் தானே வந்து கேட்கிறான். ஆகையால் வாதியாகிய அவனை நோக்கி, "ஐயா! உன்னுடைய உடைகளையும் அமானத்துப் பொருட்களையும் திரும்பக் கொடுக்க தடையொன்றுமில்லை; ஆனால் தயவுசெய்து நீ போய் உன்

னுடைய அந்தக் கூட்டாளியை உடன் அழைத்து வந்து கேள்" என்று சொல்லி விடும்படி 'விவகாரம்' கற்பித்துக் கொடுத்தார்கள்.

இதைக் கேட்டு அந்த மனிதன் திக்பிரமை யடைந்தான். காஜி சாஹிபும் "ஆஹா! இதுதான் நல்ல தீர்ப்பு" என்று ஒப்புக்கொண்டார். ஜனங்களும் பாராட்டினர். வழக்கு தள்ளுபடியாய்விட்டது. அந்த மனிதனும் தன் தோழனை கண்டுபிடிக்கப் போய்விட்டான்.

## பிக்ஹுல் மஸ்அலாவுக்கு காரண கர்த்தர்.

மேற்படி சம்பவமும், இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களுக்கு, பிக்ஹுல் மஸ்அலா என்னும் இஸ்லாமிய ஷரீஅத்து சட்ட திட்டங்கள் இயற்ற ஒரு தூண்டுகோலாய் இருந்தது. அப்போதிருந்துதான் குர்ஆன், ஹதீது, இஜ்மாஃ, கியாஸ் என்னும் ஆதார ஆதேயங்களுக்கு முரண் இல்லாமல், விவகாரங்களைத் தீர்த்து பிக்ஹுல் மஸ்அலாக்களை கோவை செய்து கிதாபுகளை இயற்றினார்கள்.

இது ஹிஜ்ரீ 120-ல் நிகழ்வுற்றதென்று சொல்லப்படுகிறது. ஹஜ்ரத் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரீ 80-ம் ஆண்டு பிறந்தார்கள் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. எனவே, தமது நாற்பதாவது வயதில் பெரிய ஆலிமாகவும் முஜ்தஹிதாகவும் பகீஹாகவும் விளங்கினார்கள்.

அபூஹனீபா என்பது காரணப்பெயர்; நுஃமான் என்பது பெற்றோர் இட்ட சொந்தப் பெயர்; இமாம் என்பது மேதா விலாசத்தைக் குறிக்கும் பதவிப் பெயர். இமாம் அபூஹனீபா (ரஹ்) அரபு வம்சத்தில் அரபு நாட்டில் உதித்தவர்களல்லர். நம்மைப்போல், அரபு குலத்தவ ரல்லாத அஜமிதான். அதாவது பார்ஸீகர் இனத்தைச் சேர்ந்தவர்கள்.

மற்றும் மூன்று பின்னைய இமாம்களான (1) இமாம் ஷாபிஈ (2) இமாம் மாலிக்கி (3) இமாம் ஹன்பலி ஆகியவர்களில், அறிவாற்றலிலும் மேதா விலாசத்திலும், குர்ஆன் ஹதீது இஜ்மாஃ கியாஸ்களை சீர்தூக்கிப் பார்த்து மஸ்அலா உண்டாக்குவதிலும் இமாம் அபூஹனிபாவுக்கு நிகரானவர் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களேயாவர்.

(மற்றும் மூன்று இமாம்களின் வரலாறுகளை, இன்ஷா அல்லாஹ்! பிறகு சமயம் வாய்க்கும்போது எழுதுகிறேன்.)

# இரத்தச் சின்னம்.

## (தொடர் கதை 21—வது பகுதி)

### 38-வது அத்தியாயம்.

**ம**ந்திரிசபை கூடி எழு நாட்களாயின. கவர்ன்மெண்டார் இரத்த சின்ன சங்கத்தின் நிபந்தனைகளுக்கு ஒத்துக் கொள்ள முடியாதென்று தெரிவித்து விட்டனர்.

அன்று மாலை பிராங்கோ தனது பங்களாவில் அன்று வரப் போகும் விருந்தாளருக்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அவரிடமுள்ள பழைய யுத்த தளவாடங்களும், கத்திகளும் உலகில் வேறு எங்கும் பார்க்க முடியாது. இவர் ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கும் போது, ஒரு கடிதம் (இரகசியம் என்று போடப்பட்டு) கிடைத்தது. அதில் குலோரியாவின் திருட்டு குணங்களை விபரிக்கப் பட்டிருந்தது.

"திருடியா! இருந்தால் என்ன? இங்கு சேர்த்து வைத்துள்ள நூதன சாமான்களுள் எதையாவது திருடக்கூடும். அவ்வளவு தானே! திருடிக் கொள்ளட்டும்" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்.

குலோரியா வந்ததும் வாயல் கதவை திறந்தது ஒரு இடாலி தேசத்தைச் சேர்ந்த வேலைக்காரன். அவன் அவளை ஒரு பெரிய அறையினுள் அழைத்துச் சென்றான். அங்கு எல்லா ஜன்னல் கதவுகளும் திறக்கப் பட்டிருந்தன. தேத்தண்ணீர் சாப்பிட மேஜை எதும் அங்கு போடப்படவில்லை ஆனால் பிராங்கோ சேர்த்து வைத்துள்ள நூதன பழைய யுத்த தளவாடங்கள் ஒழுங்காக அடுக்கப் பட்டிருந்தன. சில விநாடிகளுக்குள் பிராங்கோ அந்த அறையினுள் வந்தார். "வா! குலோரியா! நல்ல விதமாக சாப்பிடு, குடி, சந்தோஷமாக இரு. ஏனெனில் நாங்கள் நாளை சாகப் போகிறோம். இன்றே சாகலாம். உனக்கும் விஷயம் தெரியுமல்லவா?" என்று கேட்டார்.

குலோரியா தெரியாதென்று தலையை யசைத்தாள்.

"இரத்த சின்ன சங்கத்தினர் முதல் என்னை கவனிக்கப் போகிறார்களாம். இந்த சங்கத்தைப்பற்றி பத்திரிகையில் பார்த்திருப்பாய். எங்கள் மந்திரி கூட்டத்தினருள் முதலில் பலிக்கு என்னை தேர்ந்தெடுத் திருக்கிறார்கள்" என்று சிறித்துக் கொண்டே சந்தோஷமாக சொன்னார்.

"தான் கொலையுண்ணப்படுவது தெரிந்திருந்தும் இவ்வளவு சந்தோஷமாக யிருக்கிறாரே" என்று குலோரியா ஆச்சரியப் பட்டாள்.

"இன்றே இதே இடத்தில் என்னை கொலை செய்யப்படப் போவதால், என்னுடன் உன்னால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சந்தோஷமாக காலங் கழிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று அவர் சொல்லும்போது, அறையின் கதவைத் தட்டும் சப்தம் கேட்டு பிராங்கோ கதவைத் திறந்தார். இடாலி வேலைக்காரன் ஏதோ மெதுவாக இடாலி பாஷையில் பிராங்கோவினிடம் சொன்னான். குலோரியாவுக்கு அந்த பாஷை தெரியாது. பிராங்கோ வேலைக்காரனை வெளியே அனுப்பிவிட்டு, குலோரியா பக்கம் திரும்பி "குலோரியா! எனது கார் தயாராக யிருக்கிறது. நமது தேத்தண்ணீரை எனது கிராம வீட்டில் வைத்துக் கொள்ளலாம். அரை மணி நேரத்தில் அங்கு நாம் போய் சேர முடியும்" என்றார்.

எதிர்பாராமல் திடீரென்று இவ்வாறு தெரிவிக்கவே "உமது கிராம வீடு எங்கிருக்கிறது" என்று கேட்டாள்.

"ஹாட்பீல்ட் பக்கத்தில் யிருக்கிறது. மிக அருமையான இடம்" என்று தனது கிராம வீட்டை புகழ்ந்து பேசினார்.

"இங்கேயே டீ சாப்பிடலாம்" என்று அவள் சொல்ல, "குலோரியா! நான் இரத்த சின்ன சங்கத்திற்கு பயந்து சொல்வதாக நினைக்க வேண்டாம். எனது கிராம வீட்டின் அழகை நீ நேரில் பார்த்தால் சொல்வாய். நான் இன்று என்ன செய்யப் போகிறேன், எங்கு போகப் போகிறேன் என்று போலீஸ் விசாரித்தனர். அவர்களிடம், ஒரு விருந்தாளி வரப்போவதாகவும், கிராம வீட்டில் டீ சாப்பிடப் போவதாகவும் தெரிவித்து விட்டேன். அவர்களும் ஒத்துக் கொண்டனர். அதுவுமல்லாமல் எனது இரண்டு வேலையாட்களையும் அங்கு அனுப்பி வைத்திருக்கிறேன். அதனால் நீ தயவு செய்து மறுக்காமல் வா" என்று கேட்டுக் கொண்டார். அதன் பேரில் அவள் ஒத்துக் கொண்டாள். அவர் அந்த அறையை விட்டு வெளியே போனதும், அங்கு அடுக்கி வைக்கப் பட்டிருந்த, கத்தி முதலிய ஆயுதங்களை ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டிருந் தாள்.

பிராங்கோ ஒரு பெரிய கோட் அணிந்து கொண்டு, அவ்வறை யினுள் வர, இவள் கத்தி வகைகளைப் பார்த்துக் கொண்டு நிற்பதைப் பார்த்து, "எவ்வளவு நன்றாக இருக்கிறதல்லவா? ஒவ்வொன்றின் சரித்திரத்தையும் சொல்ல தற்போது நேரமில்லை" என்று சொல்லி வந்தவர், திடீரென வேறு சப்தத்தில் "அங்கிருந்த அபீசீனியாவின்

கத்தியை யார் எடுத்தது?" என்றார். ஒழுங்காக அடுக்கப்பட்டுள்ளதில், நடுவே ஒரு இடம் காலியாக யிருந்ததை குலோரியாவும் கவனித்தாள். "நானும் அந்த இடம் காலியாக இருப்பதை பார்த்து, என்ன இருந்திருக்கக் கூடுமென்று நினைத்தேன்" என்றாள்.

பிராங்கோ கோபத்துடன் "எனது வேலைக்காரன் எடுத்திருக்கக் கூடும். நானிருக்கும்போது என் முன்னிலையில் தான், கத்திகளை சுத்தம் செய்ய வேண்டுமென்று எத்தனையோ முறை சொல்லியிருந்தேன். கார் திரும்பி வந்தவுடன் அதைப் பற்றி பார்க்கலாம்" என்று சொல்லி அவளை அறையிலிருந்து வெளியே அழைத்துச் சென்றார். இந்த கத்தி காணமற் போனதால், பிராங்கோ கவலையுற்றதை குலோரியா அறிந்தாள். இதுவரை இருந்துவந்த சந்தோஷத்தைக் காணோம். "எங்கு தொலைந்தது தெரியவில்லையே! நேற்றிருந்ததே—எனது சிநேகிதர் ஒருவருக்கு காண்பித்தேனே. வேலைக்காரர்கள் எடுத்திருப்பார்களென்று சொல்வதற்கில்லை" என்று அதைப் பற்றியே காரில் போகும் போது சொல்லிக் கொண்டிருந்தார். "போலீஸிலிருந்து ஒருவன் வந்தான்—அவனா—சீ—அவன் எதற்கு எடுப்பான். இது ஒரு சிறிய மர்மமாக இருக்கிறது. சரி, பின் பார்க்கலாம்" என்றார். பிறகு அவளுடன் சந்தோஷமாக பல விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தார். அதுவரை அவர் பேசுவதில், மிக்க கண்ணியமானவராகவே தோன்றினார்.

அவர்கள் கிராம வீட்டை யடைந்தனர். அந்த வீடு மிக அழகாக இருந்தது; மெயின் ரோட்டிலிருந்து 3 மைல் தூரமிருந்தது. வீட்டைச் சுற்றி நிறைய மாஞ்செடிகள் கூடைகள் குவித்திருப்பது போலிருந்தன.

முன் பெரிய ஹாலில் ஒரு மேஜையின் பேரில் தேத்தண்ணீர் தயாராக வைக்கப்பட்டிருந்தது. ஆனால் வேலைக்காரர்களைக் காணோம்.

"எனது கண்ணே! நமது யிடத்திற்கு வந்து விட்டோம் நாமிருவரும் இங்கு தனியாக யிருக்கிறோம்" என்று பிராங்கோ சொல்லியதும், குலோரியா நிமிர்ந்து பார்க்க, பழைய பிராங்கோ தென்பட வில்லை. காமபித்தம் தலைக்கேறிய பிராங்கோவின் முகமே மாற்றமாக யிருந்தது. இதையறிந்த பின்னும் குலோரியா பயப்பட வில்லை. தேத்தண்ணீர் கோப்பைகளில் ஊற்றினாள். அச்சமயம் பக்கத்தில் நின்ற பிராங்கோ திடீரென குனிந்து, அவளிடம் யாதும் கேட்காமல் ஒரு முத்தமிட்டார். இன்னொரு முத்தமிட்டார். மறுவினாடியில் அவளை கையினால் இறுகக் கட்டினார். அவள் அவர் முகத்தை நன்றாக உற்று நோக்கி, "நான் சில சமாச்சாரம் சொல்ல வேண்டும்" என்றாள்.

187048

"உன் மனதிலுள்ளதை யெல்லாம் சொல் என் கண்ணே!" என்று சொல்லிக் கொண்டே அவளை பிடித்த பிடியை விடவில்லை. அவள் வாயை திறந்து சொல்வதற்குள், முத்தங்களால் அவள் வாயை அடைத்தார். இவரிடம் சாந்தமாய் பேசி தப்பிக்க முடியா தென்று, அவர் பிடியை விட்டு தப்பிக்க முயற்சித்தாள். அதையறிந்த அவர் அவளை விடவில்லை. அந்த அறையின் ஒரு பக்கத்தில் ஒரு திறை தொங்கிக் கொண்டிருந்தது. அந்த திறையின் பக்கம், இவளை சிறிது தூக்கியவாறு இழுத்தார். அச்சமயம் அவள் கூச்சலிடுவாள் என்று அவர் நினைத்தார். ஆனால் அவள் யாதும் சப்தமிடவில்லை. இரு முறை ஏதோ பேச முயற்சித்தாள். இருமுறையும் பேசமுடியாதவாறு செய்தார். அந்த திறையினருகே செல்ல செல்ல, அவள் அவர் பிடியினின்றும் தப்பிககத் துடித்தாள்.

அவரின் இரு வேலைக்காரர்களும் சமையலறையிலிருந்தனர். இந்த ஹாலுக்கும் சமையலறைக்கும் கொஞ்சம் தூரம். அவர்கள் திடீரென்று அபாயத்தில் கதறும் சப்தம் ஒன்று கேட்டனர். ஒருவரை யொருவர் பார்த்தனர். பிறகு ஹாலுக்கு ஓடிவந்தனர். அந்த திறையினருகே மல்லாந்து கிடந்தார் பிராங்கோ. அவரின் தோளில் ஆசிரியன் கத்தி சுமார் 3 அங்குலம் இறங்கி இருந்தது. அவரின் பக்கத்தில் முகம் வெளுக்க நின்றிருந்தாள் குலோரியா. அதைப் பார்த்த வேலைக்காரன் ஒருவன் தோளில் குத்தப்பட்ட கத்தியைப் பிடுங்கி விட்டு, எஜமானை தூக்கி பக்கத்திலிருந்த சோபாவில் போட்டான். மற்றவன் டெலிபோன் செய்ய ஓடினான். குத்தப் பட்ட காயத்திலிருந்து வரும் இரத்தத்தை நிற்பாட்ட, ஏதோ அங்கு நின்ற குலோரியாவினிடம் இடாலி பாஷையில் சொன்னான்.

அவன் சொன்னது அவள் காதில் நுழைய வில்லை. நுழைந் திருந்தாலும் விளங்கியிருக்க முடியாது. கனவில் நடப்பதுபோல் நடந்து ஹாலை விட்டு வெளியே வந்தாள். வெளியே பிராங்கோ வின் கார் யிருந்தது. சுற்றிப் பார்த்தாள், யாரையும் காணோம். உடனே காரினுள் ஏறி வேகமாக ஓட்டினாள். காம்பௌண்ட் கேட் இரும்பு கதவுகளுடையது. அது பூட்டப்பட்டிருந்தது. இறங்கி அதை திறக்க முயற்சிப்பது ஒழுங்கல்ல என்று நினைத்து, காரை சிறிது தூரம் பின்னால் ஓட்டிய பின், வேகமாக முன் ஓட்டி இரும்பு கதவில் மோதினாள். கதவுகள் உடைந்தன. காரின் முன் பக்கம் வளைந்தது. முன் விளக்குகள் ஒடிந்து கண்ணாடிகள் சிதறின. ஆனால் கேட்டை கார் தாண்டி விட்டது. லண்டன் பக்கம் காரை ஓட்டினாள்.

தனது இருப்பிடம் வந்து லிப்டில் ஏறினள். லிப்டி லிருந்த வேலைக்காரன் அவளைப் பார்த்ததும் பிரமித்து விட்டான். அவள் முகம் சோர்ந்திருந்தாள். "உங்களுக்கு உடம்பு சௌகரியம் தானே! முகம் மிக சோர்ந்திருக்கிறதே" என்றான். "உடம்பு சௌகரியம் தான்" என்று சொல்லியவாறு தனது அறைக்கு ஓடி கதவை மூடினள். டெலிபோனை எடுத்து ஒரு நம்பரை கூப்பிட்டாள். ஆள் கிடைத்ததும் அவனிடம், அழுது கொண்டே ஏதேதோ விஷயங்கள், ஒன்றுக் கொன்று சம்மந்தமில்லாதவைகளைச் சொன்னள். மற்றவனல் இவள் சொல்வதை விளங்க முடியவில்லை. அத்துடன் "போதும் போதும் இனி மேல் என்னல் ஒன்றும் செய்ய முடியாது. செய்யவும் மாட்டேன். அந்த காக்ஷி சகிக்க முடியவில்லை" என்று சொல்லி டெலிபோனை வைத்து விட்டாள்.

அவளுக்கு தலை சுற்றியது. நாற்காலியில் அமர்ந்தாள். மயக்க மாக யிருந்தது. அநேக நேரம் அப்படியே உட்காரவே, சற்று மனத் தெளிவு ஏற்பட்டது. அச்சமயம் ஸிம்ஸன் அவளை பார்க்க வந்தார். "ஏது இங்கு வந்தீர்கள்? உங்களுடன் வந்திருப்பவர் யார்?" என்று ஸிம்ஸனின் பின்னல் நின்ற ஆளை பார்த்தபின் கேட்டாள்.

"குலோரியா! உன்னை சிறை செய்ய வாரண்டுடன் வந்துள் ளேன்" என்று அதிகாரத் தோரணையில் சொன்னர்.

"இன்னெரு முறையா? நான் அடிக்கடி போலீஸினிடம் அகப் பட்டவளாகவே யிருந்து வருகிறேன். இம்முறை என்ன குற்றம்?"

"கொலை செய்ய முயற்சி செய்ததாக குற்றம். பிராங்கோவை கொலை செய்ய முயற்சி. இனி என்ன சொன்னலும் அதை பிரயோ ஜனப்படுத்திக் கொள்வோம். ஆதலால் கவனித்து பேசு" என்றார் ஸிம்ஸன்.

அப்பொழுது அவரின் பக்கத்தி லிருந்த மனிதன் முன் வந்து, குலோரியாவின் கையைப் பிடித்தான்.

அன்றிரவை குலோரியா போலீஸ் ஸ்டேஷனில் கழித்தாள்.

## 39-வது அத்தியாயம்

"என்ன நடந்தது என்பதை பின் தான் அறிய வேண்டும்" என்று ஸிம்ஸன் பெண்டனிடம் தெரிவித்தார். அத்துடன் "நான், பிராங்கோவின் பங்களாவிற்கு போகும் போது, இருவரையும் அங்கு காணேம். வேலைக்காரர்களிடம் விசாரித்ததில் சரியான பதில் கிடைக்கவில்லை. இருந்தாலும் இருவரும் கிராம வீட்டிற்கு போயிருக் கக் கூடு மென்று கண்டு பிடித்தேன். அவள் அவரை வற்புறுத்தி கிராம வீட்டுக்கு போகும்படி செய்தாளோ அல்லது அவர் இவளை

கூப்பிட்டு சென்ருரோ தெரியவில்லை. அவளை அவர் கூப்பிட்டுச் சென்றிருக்கலா மென்பது எனது அபிப்பிராயம். எனக்கு குலோரியாவின் பேரில் சந்தேகம் எப்பொழுதும் இருந்து வருவதால், கவலையாகி, கிராம வீட்டிற்கு ஓடினேன். அதற்குள் அவள் அந்த வீட்டை விட்டு, வெளி கதவை உடைத்துக் கொண்டு, காரில் வெளியே ஓடி விட்டாள்" என்று ஸிம்ஸன் விபரித்தார்.

"பிராங்கோ எப்படி யிருக்கிருர் ?"

"அவர் தப்பித்துக் கொள்வார். காயம் பிரமாதமாயில்லை. குத்து தவறி யிருக்கிறது. பிராங்கோ அவளை தனது பங்களாவில் கத்திகளுள்ள அறையில் விட்டு, ஓவர் கோட் போட சென்று, பின் திரும்பி வந்து பார்க்கும் போது கத்தியைக் காணுமாம். அச்சமயம் அவள் அந்த கத்தியை எடுத்து மறைத்து வைத்திருக்கக்கூடு மென்று அவர் நினைக்கிருர். அப்படியும் இருக்கலாம். பிராங்கோ, கத்தி குத்து படுவதற்கு முன்னுள்ள விஷயங்களை சரிவர விபரித்து சொல்ல மறுக்கிருர்"

"அவர் யிருந்த அறை எவ்வாறிருந்தது? தற்போது குத்து பட்டாரே அந்த அறை?"

"ஒரு சிறிய அழகான அறை. அதற்குப் பக்கத்தில் இன்னொரு அறை. இரண்டுக்கும் மத்தியில் ஒரு திறை போடப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் அவமதிப்பான சமாச்சாரங்கள் அதிகம் நடைபெற்றிருக்கக்கூடு மென்று நினைக்க வேண்டிய திருக்கிறது. அங்குள்ள திறையினருகே இந்த கத்தி குத்து நடைபெற்றதாம்" என்று ஸிம்ஸன் சொல்லும் போது, இவைகளை எதிரில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்த பென்டன் கண்ணை மூடிக் கொண்டு தூங்குவது போல் யிருந்தார். ஆனல் தூங்கவில்லை. ஸிம்ஸன் சொல்லுவதை ஒன்று விடாமல் கேட்டு, யோசித்துக் கொண்டிருந்தார். திடீரென்று கண்ணை திறந்து ஏதோ சொல்ல ஆரம்பித்தார். அதற்கும் தற்போது பேசும் சமாச்சாரத்திற்கும் சம்பந்தமேயில்லை.

"பெரிய பெரிய கொலையாளிகளெல்லாம், சிறு தப்பினல், மாட்டி பெருங் கஷ்டத்திற்குள்ளாவது வழமை" என்ருர்.

அதைக் கேட்ட ஸிம்ஸன் சிறித்து, "இவ்விஷயத்தில், பிராங்கோவை சரிவர கொலை செய்யாதது தப்பாக யிருக்கலாம். பிரான்கோ மிக நல்லவர்-அவர் தப்பித்ததைப் பற்றி என்வரை மிக சந்தோஷம்" என்ருர்.

"நான் பிராங்கோவைப் பற்றி நினைத்துப் பேசவில்லை. ஒருவன் என்னிடம் ஒரு பொய்யை சொன்னன். அவன் யோசனை செய்திருந்தால் அதை என்னிடம் சொல்லாம லிருந்திருப்பான்"

என்று பென்டன் சொல்லி, அங்கிருந்து புறப்பட்டு டாமிடம் குலோரியாவைப்பற்றி தெரிவிக்கச் சென்ருர். பென்டனுக்கு குலோரியாவை சிறை செய்தது தெரியவந்ததும் டாமைப் பற்றித்தான் நினைத்தார். இவருக்கு டாமின் பேரில் அதிக பிரியம். இவருக்கு தன் பேரில் எவ்வளவு பிரியமென்று டாமுக்கே தெரியாது. தற்போது சொல்லப் போகும் விஷயம் குலோரியாவை நேசிக்கும் டாமுக்கு எவ்வளவு கவலையைக் கொடுக்கு மென்று பென்டனுக்கு நன்ருகத் தெரியும்.

டாமுக்கு இவ்விஷயம் முன்பே தெரிந்து விட்டது. அன்றைய பத்திரிகையில் குலோரியாவின் சிறை விஷயமாக போடப் பட்டிருந்தது. பென்டன் வரும் போது, டாம் கவலையுடன் வீற்றிருப்பதைப் பார்த்தார்.

"நல்ல தேர்ந்த லாயர்களை அவளுக்காக வைக்க வேண்டும். நீங்கள் அவளுச்கு எதிர் கட்சியை சேர்ந்திருந்தும், உங்களிடம் என் மனதிலுள்ளதை தெரிவிக்கிறேன்" என்ருன்.

"சரி. இருந்தாலும் குலோரியாவை தப்பிக்க வைக்க வேண்டு மென்ற எண்ணம் எனக்கு சிறிதும் கிடையாது" என்று பென்டன் சொன்னர்.

"நீங்களா? உங்களைப் பற்றி என்னென்னமோ நினைத்திருந் தேன்......" என்று திகைப்புடன் சொன்ஞன்.

"நான் ஒரு சாதாரண மனிதன். ஒரு திருடன் எப்பொழுதும் திருடன்தான். நான் எவ்வளவோ பேரை சிறை செய்திருக்கிறேன். இருந்தாலும் அவர்களுள் யார் பேரிலும் எனக்கு மன வருத்தமோ கிடையாது. முன் பாஷாணம் கொடுத்து சாவடிக்கும் ட்ருஎன்டை பிடித்து தூக்குக்கு அனுப்பினேன். ஆனால் அவன் எனக்கு மிக பிடித்தமானவன். சிநேகிதத்துக்கு மிக லாயக்கானவன். இருந்தாலும் தப்புக்கு தண்டனை கொடுத்தே தீர வேண்டும்" என்ருர்.

இதைக் கேட்ட டாமுக்கு உடம்பு நடுங்கிற்று. "குலோரியா வைப் பற்றி பேசும்போது பாஷாணம் கொடுக்கும் கொலையாளிகளை ஒப்பிட்டு பேசாதீர்கள். இவள் இரத்த சின்ன சங்கத்தில் சேர்ந்த முக்கியமானவள் என்று எண்ணுகிறீர்களா?" என்று கேட்டான்.

"நமது மார்க்கத்தின் தலைவரே இந்த சங்கத்தை நடத்துகிருர் என்று ஒருவர் வந்து என்னிடம் சொன்னலும் நான் ஆச்சரியப் படமாட்டேன். இந்த சங்கத்தின் மர்மம் வெளியாகும் போது, எல்லோருமே ஆச்சரியப்பட வேண்டியதாக யிருக்கும். நான் இந்த சங்கத்தைப் பற்றி விசாரணை நடத்தி வருவதில், இந்த சங்கத்தின்

தலைவன் யாராகவு மிருக்கலா மென்று எண்ணியே வருகிறேன். நீயோ, ஹட்டனோ, நமது கமிஷனரோ, ஸிம்ஸனோ, குலோரியாவோ" என்றார்.

"தற்போதும் அதே எண்ணத்துடனா இருக்கிறீர்கள்? அப்படியாயின் நீங்களே அந்த சங்கத்தின் தலைவனாக யிருக்கக் கூடாதா?"

"இருக்கலாம்-எனது தாயார் சொல்லுகிறாள்....." என்று பென்டன் சொல்ல தொடங்க, டாமுக்கு சிரிப்பு வந்து விட்டது.

"உங்களது பாட்டி மிகவும் கெட்டிக் காரியாகத் தெரிகிறது. அவள் இரத்த சின்ன சங்கத்தைப் பற்றி என்ன சொல்கிறாள்?" என்று டாம் கேட்டான்.

"இந்த சங்கத்தின் முதல் கொலை நடக்ததும, யார் செய்திருக்கக் கூடு மென்று அவளுக்குத் தெரியும். அவளிடம் கேட்டே நான் எனது விசாரணையை நடத்தி வருகிறேன்" என்றார் பென்டன்.

இதைக் கேட்ட டாம் தனக்குள்ளாகவே "இவ்வளவு பெரிய இன்ஸ்பெக்டர் பதவியிலுள்ளவர் இவ்வாறு பேசுகிறாரே! இவருக்கு சொந்த யோசனையே கிடையாதா! பாட்டி சொல்லுகிறபடி தனது விஷயத்தை நடத்துகிறேனென்று பெருமையாகவும் சொல்லுகிறாரே" என்று சிந்தித்தான்.

"இன்னொரு முறை நான் வந்து உங்களது பாட்டியை சந்தித்து பேச பிரியப் படுகிறேன்" என்றான்.

"அவள் கிராமத்திற்கு போய் விட்டாள். தற்போது நான் தனியாக யிருக்கிறேன். காலையில் ஒரு வேலைக்காரப் பெண் வந்து வீட்டை சுத்தம் செய்து போகிறாள். மாலையில் வேறு யாரும் கிடையாது. எனக்கு பாட்டி யில்லாததால், எனது வீடே நன்றாக யில்லை" என்றார். பிறகு வீட்டு பேச்சை மாற்றியவாறு "நாளை குலோரியாவை கோர்ட்டுக்கு கொண்டு வந்து குற்றச்சாட்டு பத்திரம் படித்து, சிறை செய்ய உத்திரவாகும்" என்றும் சொன்னார்.

"ஜாமீனில் விடுதலை செய்ய வழி யில்லையோ"

பென்டன் தலையை யசைத்துக் கொண்டே "விடமாட்டார்கள். பால்டிக் ஜெயிலுக்கு போக வேண்டியதுதான். அங்கு அவளுக்கு அதிக கஷ்டம் கொடுக்க மாட்டார்கள். இங்கிருக்கும் ஜெயில்களுள் அது அருமையான ஜெயில்"

"அவளை எப்படி ஸிம்ஸன் பிடித்தார். நீங்களல்லவா செய்ய வேண்டும்?"

"எனது உத்திரவின் பேரில் செய்தார். அவர் தற்போது போலீஸில் சேர்த்து விட்டார்" என்று பென்டன் பதில் சொன்னார்.

மறுநாள் பென்டன் சொல்லிய படியே குலோரியா கோர்ட்டுக்கு கொண்டு போகப்பட்டு, பின் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டாள்.

இதற்கிடையில் பிராங்கோ ஒரு அந்நிய ஸ்திரீயை கிராம வீட்டுக்கு அழைத்து சென்று, அவளுடன் சல்லாப விளையாட்டுகள் ஆடும் போது, கத்தியால் குத்தப்பட்ட விஷயம் வெளி வருவதற்கு முன், மந்திரி சபையை விட்டு ராஜிநாமா செய்யுமாறு பிரதமர் கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க பிராங்கோவும் தனது மந்திரி பதவியை ராஜிநாமா செய்து விட்டார். தான் குலோரியா விஷயத்தில் செய்ததை நினைத்தும் வருந்தினார்.

பென்டன் ஜெயிலிலிருந்த குலோரியாவை சந்திக்கச் சென்றார். தனியாக அறையினுள் பார்க்க முடியாதென்றும், ஜெயில் அதிகாரியின் முன் சந்திக்க முடியுமென்றும் குலோரியா தெரிவித்தாள். அதன் பேரில் ஜெயில் அதிகாரியின் முன் இருவரும் சந்திக்க ஏற்பாடாயிற்று. "மிஸ்டர் பென்டன்! தனியாக சந்திக்க மறுத்ததைப் பற்றி வருந்த வேண்டாம். இரத்த சின்ன சங்கத்தில் சேர்ந்தவர்கள் தனியாக யாரையும் சந்தித்ததும் மரண மடைந்த விஷயம் கேட்ட பின், எனக்கு யாரையும் தனியாக சந்திக்க இஷ்டமில்லை" என்றாள்.

"அவ்வாறு அநேகர் இறந்ததாக எனக்குத் தெரியாது. சார்லீ ஒன்று தான் எனக்கு ஞாபக மிருக்கிறது" என்றார்.

"அதிருக்கட்டும். தற்போது நீங்கள் என்ன பேச வேண்டும்?"

"பிராங்கோவுடன் சந்தித்ததைப் பற்றி முழுவிபரம் வேண்டும்" என்று பென்டன் கேட்டார்.

அவளுக்கு தெரிந்த பூரா விஷயத்தையும் விபரித்தாள்.

"அந்த கத்தி காணோ மென்று நீ எப்பொழுது அறிந்தாய்?"

"பிராங்கோ கோட் அணிய வெளியே போயிருக்கும் போது, நான் அவ்வறையைச் சுற்றிப் பார்க்கும் போது ஒரு இடம் காலியாக யிருந்ததை அறிந்தேன். பிராங்கோ எப்படி இருக்கிறார்?"

"அவர் சௌக்கியமாக யிருக்கிறார். நல்ல ஆகிவிடுவார். அதிருக்கட்டும். பிராங்கோவுக்கும் அப்பொழுது தான் கத்தி காணாமற் போனது தெரியுமா?"

"ஆம்"

"மேலே மூடிக் கொள்ளும் துணி ஏதும் நீ அச்சமயம் வைத்திருந்தாயா?"

"ஆம். ஏன் கேட்கிறீர்கள்? அதில் கத்தியை மறைத்து வைத்திருக்கக் கூடு மென்று நினைக்கிறீர்களோ?"

"நீ கிராம வீட்டுக்கு போகும் போது, அந்த துணியை கையில் எடுத்துக் கொண்டு போனுயல்லவா"

"ஆம்" என்று குலோரியா சொல்லியதும், பென்டன் எழுந்து "உனக்கு வேண்டிய சாப்பாடு வகை யெல்லாம் கொடுக்கிறார்களா?" என்று கேட்டார்.

"ஆம். ஜெயிலி லிருந்து கிடைக்கிறது. வெளியி லிருந்து சாப்பாடு வரலாம். இருந்தாலும் யாரும் என் பேரில் இரக்கப்படுவ தாக சொல்லி, பாஷாணம் கலந்த சாப்பாடை அனுப்பி, அதை தின்பதை விட, இங்கு கிடைக்கக் கூடிய ஜெயில் சாப்பாடே மேல்" என்ருள்.

"நீ புத்திசாலி" என்ருர் இன்ஸ்பெக்டர். (தொடரும்)


## ஹஸ்ரத் ஷய்க் பூஅலி கலந்தர் அவர்களின் சரித்திர சுருக்கம்

இப்புஸ்தகத்தில் ஹஸரத் ஷெய்க் பூஅலி கலந்தர் ஷர்புத்தீன் பாணிபத்தி (றஹ்) அவர்கள் பிறந்ததும், நகர வாசத்தை வெறுத்து காடுகளிலும் மலைகளிலும் குகை களிலும் போய் இறைவனது தியானத்தில் மூழ்கியதும் அவர்களுக்கு முர்ஷித் (குரு) ஹஸ்ரத் ஸைய்யிதினு ஆஷிக் குதா (றஹ்) அவர்களின் தரிசனம் வாயப் பெற்ற தும், அவர்களின் மகத்தான கருமத்துகளும், அவர்களின் வபாத்தும், அவர்கள் பேருக்கு ஓதப்படும் "ஸைஹுமனி பாத்திஹா" வின் விபரமும் அடங்கியுள்ளன.

இதன் விலை அணு. 4

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ.20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

18708